Series : €ABA€

SET-4

प्रश्न-पत्र कोड
Q.P. Code **6**

रोल नं.
Roll No. | | | | | | | | |

परीक्षार्थी कोड को उत्तर-पुस्तिका के मुख-पृष्ठ पर अवश्य लिखें ।
Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

- *இந்த வினாத்தாளில் அச்சிடப் பெற்ற 4 பக்கங்கள் உள்ளதைச் சரி பாரார்க்கவும்.*
- *வினாத்தாளின் வலது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை* **(Code No.)** *விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்*
- ***இந்த வினாத்தாளில் 22 வினாக்கள் உள்ளனவா எனச் சரி பார்க்கவும்.***
- *எழுதத் தொடங்குவதற்கு முன் வரிசை எண்ணைக் கு றிப்பிடவும்.*
- *வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந் நேரத்தில் விடைத்தாளில் எந்ப் பதிலையும் எழுதக்கூடாது.*
- Please check that this question paper contains **4** printed pages.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **22** questions.
- **Please write down the Serial Number of the question in the answer-book before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

*

*தமிழ்*

# TAMIL

*கால அளவு : **2** மணி*
*Time allowed : **2** hours*

*மொ. மதிப்பெண்கள் : **40***
*Maximum Marks : **40***

I. பின்வரும் இலக்கண வினாக்களில் எவையேனும் மூன்றனுக்குக் குறுகிய விடை எழுதுக : **3 × 2 = 6**

1. இடைச் சொற்களைத் தொடர்களில் எழுதும் போது சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் ஏற்படும் பொருள் மயக்கத்தை இரு எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.
2. காற்புள்ளியால் ஏற்படும் பொருள் மயக்கம் குறித்து எழுதுக.
3. பிழைகளைத் தவிர்க்க மேற்கொள்ள வேண்டிய சில குறிப்புகளை எழுதுக.
4. வினைப் படிமம் என்றால் என்ன?
5. சங்க இலக்கியப் பாடலில் படிமம் அமைந்துள்ள முறைக்கு ஓர் எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

II. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்குக் குறுகிய விடை எழுதுக. **2 × 2 = 4**

6. இராமன், சடாயுக்குச் செய்த இறுதிச் சடங்கு குறித்து எழுதுக.
7. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?
8. அகநானூற்றுப் பாடலில் அமைந்த உள்ளுறையை எழுதுக.
9. பங்குனி உத்திரத் திருவிழாக் குறித்து எழுதுக.

*

III. பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்குச் சுருக்கமான விடை எழுதுக. **2 × 3 = 6**

10. நம் பாடப்பகுதியில் குகப்படலம் உணர்த்தும் செய்திகள் யாவை?
11. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
12. இராமலிங்க அடிகள் இறைவனிடம் யாது வேண்டுகிறார்?
13. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

IV. பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விரிவான விடை எழுதுக. **2 × 5 = 10**

14. தந்தை வழிக் குடும்பம் சங்க காலத்திலேயே பரவலாகி விட்டதை எவ்வாறு அறியலாம்?
15. ‘மணந்தகம்’ – விளக்குக.
16. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களை விளக்குக.
17. சென்னையின் தொன்மை குறித்து விளக்குக.

V. பின்வரும் துணைப்பாடக் கட்டுரைகளுள் ஒன்று குறித்து வரிவாக எழுதுக. 1 × 5 = 5

18. உரிமைத்தாகம் – கதைச்சுருக்கம்.

19. கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருவதைத் தலைக்குளம் கதை வழி விவரிக்க.

VI. 20. பின்வரும் உரைநடைப் பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக. 4

நானூற்று அறுபது கோடி ஆண்டு வயது கொண்ட பூமிப்பந்தின் பல்வேறு தருணங்களில் நிலத்திலும் கடலிலும் கட்டுப்பாடற்ற இயற்கை மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றின் விளைவாகத் தொன்மையான உயிரினங்கள் பலவும் பூண்டோடு அற்றுப் போயிருக்கின்றன. அவ்வாறு அழிந்து வரும் உயிரினங்களுள் ஒன்று மீன் வகை. மீனின் பல்லுயிர் வளம் அழிய வாய்ப்பிருக்கிறதா? நிறையவே இருக்கிறது!

புவி வெப்பமயமாதல், பனிப்பாறைகள் உருகிவழிதல், கடல் மாசுபடுதல், மிகை மீன் பிடித்தல், கட்டுப்பாடின்றிக் கடல் வளத்தைக் கொள்ளையிடுதல் என்பதாக நீண்ட வரிசையில் மீன்களுக்கு மிரட்டல்கள் அணிவகுத்து நிற்கின்றன. நிலம் சார்ந்த பல அரிய உயிரினங்கள் போலவே மீனினங்களும் அழிவின் விளிம்பில் நிற்கின்றன. மீனினம் இல்லாமல் மனிதனால் வாழவே முடியாது! பல்லுயிர் வளங்களைக் காப்பதில் தான் மனித குலத்தின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது.

VII. ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக. 1 × 5 = 5

21. நீ சென்று வந்த புத்தகக் கண்காட்சியின் சிறப்புகளை விளக்கி உன் நண்பனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

அல்லது

22. உன் பகுதியில் உள்ள கழிவுநீர்க் கால்வாயைத் தூர்வார வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.
(இரண்டிலும் உன் முகவரி :
அ. கண்ணன் / அ. ரேகா, 28. நேரு நகர், திருச்சி –02 எனக் கொள்க.)

*